Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 54

வியாழக்கிழமை 19 ஜனவரி 2023

தை 05 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

அரகலயவை ஒடுக்கியபாணியில்

# ரணிலுக்கு எதிராகப் போராடியவர்களை கைது செய்யும் படலம் யாழில் ஆரம்பம்!

- வேலன் சுவாமி கைதாகி நேற்றிரவு பிணையில் விடுவிப்பு
- இன்னும் பலரைக் கைது செய்யத் திட்டம்
- அம்பாறை – யாழ்ப்பாணம் போராட்டத்தை ஒடுக்க அரசாங்கம் பலப்பிரயோகம்?



**யாழ்ப்பாணம், ஜனவரி 19**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய தைப்பொங்கல் விழாவுக்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் - நல்லூருக்கு வந்தபோது அதனை எதிர்த்துப் போராட்டம் நடத்திய குற்றச்சாட்டில் வேலன் சுவாமிகள் நேற்று கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். மேலும் பலரை கைது செய்வதற்கு பொலிஸாருக்கு கொழும்பிலிருந்து ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் நம்பகரமாக அறியமுடிகின்றது.**

»11

## புலிகளின் கூட்டமைப்பை உடைத்து துரோகமிழைத்துவிட்டார் சம்பந்தன்

### தமிழ் அரசுவின் கிளைத் தலைவர் கே.வி.தவராசா காட்டமான கடிதம்

யாழ்ப்பாணம், ஜன. 19

2009ஆம் ஆண்டு போர் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழ்த் தேசிய அரசியலைச் சிதைக்க சில விஷமிகள் கூட்டமைப்புக்குள் உள்நுழைந்தார்கள். திட்டமிட்டு பிரிவினையைத்தூண்டி அதை உங்களைவைத்தே நடைமுறைப்படுத்தினார்கள். இப்போது ஒப்பாரும் மிக்காருமில்லாத் தலைவரால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பையே சின்னாபின்னமாக்கி வரலாற்றுத் துரோகத்துக்கு »10

## விடுதி அறையினுள் இரகசிய 'கமெரா'

### கையும் மெய்யுமாக மாட்டிய யாழ். நகர 'ஹோட்டல்' ஊழியர்

யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள 'ஹோட்டல்' ஒன்றில் அறையினுள் தங்கியிருந்தவர்களை நள்ளிரவு நேரம் இரகசியமாக 'கமெரா'வில் ஒளிப்பதிவு செய்த, ஹோட்டல் பணியாளர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். »11

## ச.தொ.ச.வில் விலை குறைப்பு

கொழும்பு, ஜன. 19

லங்கா சதொச நிறுவனம் 12 அத்தியாவசியப்பொருள்களுக்கான விலைகளை நேற்று நள்ளிரவு முதல் குறைத்துள்ளது.

பெரிய வெங்காயம் 1 கிலோ 5 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 180 ரூபாவாகறணா »10

### யாழ்ப்பாணம் மாநகர மேயர் தெரிவு இன்று

## ஆர்னோல்ட் மீண்டும் தெரிவாக வாய்ப்பு!!!

யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ். மாநகரசபை மேயர் தெரிவு இன்று இடம்பெறவுள்ள நிலையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் களமிறக்கப்படும் »10

### வடபிராந்திய

## இ.போ.ச. முகாமையாளர் நியமனத்துக்கு எதிர்ப்பு

### தகுதியான பலர் இங்கிருக்க வெளியிலிருந்து ஏன் நியமனம்?

யாழ்ப்பாணம், ஜன. 19

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய முகாமையாளர் பதவி வெற்றிடமாகவுள்ள நிலையில், வடக்கு நிர்வாகத்தை »11

## வடக்கில் 2 கட்சிகள் நேற்று வேட்புமனு

யாழ்ப்பாணம், ஜன. 19

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையில் முதல் நாளிலேயே இரண்டு கட்சிகள் தங்களது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேசசபைகளுக்கும் »11

## சொல்லை விடவும் செயலே சிறந்தது

யாழ். மாவட்டச் செயலராக பொறுப்பேற்ற பின்னர் அ.சிவபாலசுந்தரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 19

சொல்லைவிட செயல்திறன் சிறந்தது. அதனைச் செய்வோம் - இவ்வாறு யாழ். மாவட்டத்தின் புதிய மாவட்டச் செயலராகப் பதவியேற்றுள்ள அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார். »11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முல்லைத்தீவு, வவுனியாவில்

# மருத்துவ நெருக்கடியை தீர்க்குமாறு போராட்டம்!

முல்லைத்தீவு, ஜன. 19

அரச மருத்துவமனைகளில் நில வும் மருந்து மற்றும் உபகர ணங்களுக்கான தட்டுப்பாட்டை உடனடியாகத் தீர்க்கக்கோரி முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்ட அரசமருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.



மருத்துவ சேவையைப் பெற்றுக் கொள்ளவரும் நோயாளர்களுக்கு எந்தவித தடங்கல்களும் பாதிப் புக்களும் ஏற்படாத வண்ணம் இந்தக் கவனவீர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது தன்னிச்சையான அசாதாரண வரித்திருத்தத்தை மீளப்பெற வலியுறுத்தியும் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குரல் கொடுத்தனர். (ம-14.19)

## களவாடப்பட்டிருந்த மாடு உரிமையாளரால் மீட்பு!

மன்னார், ஜன. 19

மேய்ச்சலுக்காக விடப்பட்ட மாடொன்று திருடப்பட்டு இறைச்சியாக்கப்படவிருந்த நிலையில், அந்த மாடு அதன் உரிமையா ளரால் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த மாடு நானாட்டான் மடுக்கரைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை மேய்ச்ச லுக்கு விடப்பட்டது. மாலை வேளையா கியும் மாட்டைக் காணாததால் உரிமை யாளர் மாட்டைத் தேடிச் சென்றுள்ளார். அந்தப் பகுதியில் மாடு இல்லாததால் தொடர்ச்சியாக தேடியுள்ளார். மறுநாள் மடுக்கரை அருவி ஆற்றங்கரையில் இறைச் சியாக்குவதற்கு ஏதுவாக கட்டப்பட்டிருந்த நிலையில் அந்த மாடு மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப் பட்டுள்ளது. (ம-14,213)

## பொங்கல்விழாவில் மோதல்: 5 பேர் மருத்துவமனையில்!

யாழ்ப்பாணம், ஜன. 19

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலி மாவத்தைப் பகுதியில் கடந்த பொங்கல் தினத்தன்று இடம்பெற்ற குழு மோதலில் ஐந்து பேர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர் என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொங்கல் தினத்தன்று விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன. இறுதியில் கயிறு இழுத்தல் போட்டி நடைபெற்றது. அதன்போது இரு குழுக்களிடையே மோதல் ஏற்பட்டுள்ளது. மோதலில் 5 நபர்கள் படு காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க் கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இது தொடர் பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-14.27)



## கஞ்சா கடத்த முற்பட்ட இருவருக்கு மறியல்!

முல்லைத்தீவு, ஜன. 19

முல்லைத்தீவு ஐயன்கன்குள பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பகுதியில் கஞ்சாவை கடத்த முற்பட்ட குற்றச்சாட் டில் இருவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஐயன்கன்குளம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்க மைய கடத்தல் முறியடிக்கப்பட்டு இந்தக் கைது இடம் பெற்றது. கிளிநொச்சி மற்றும் தருமபுரம் பகுதியைச் சேர்ந்த இருவரே கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 6 கிலோ கஞ்சா மீட்கப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-19)

## மோ.சைக்கிள் விபத்தில் மூவர் மருத்துவமனையில்

### ஒரே குடும்பத்தைச் சேர்ந்தோர்

சாவகச்சேரி, ஜன. 19

மோட்டார் சைக்கிள் கல்லில் தடுக்கியதில் தூக்கி வீசப்பட்டு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயங் களுக்குள்ளான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கி ழமை கேரதீவு அறுகுவெளி ஏ-32 வீதியில் இடம் பெற்றது.

முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி மோட் டார் சைக்கிளில் பயணித்த தந்தை, தாய் மற்றும் மூன்றரை வயதுக் குழந்தை ஆகியோரே காயங்க ளுக்குள்ளாகினர் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவர் கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். (ச-9,131)

## ‘பனைத்திருவிழா’ 2023

### ஆக்கத்திறன் விருத்திப் போட்டி

யாழ்ப்பாணம், ஜன.19

பனைத்திருவிழாவை முன்னிட்டு பாடசாலை மாண வர்களுக்கான ஆக்கத்திறன் விருத்திப் போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை முன்னெடுக்கப்படவுள் ளன. தரம் 1 தொடக்கம் 5 வரையான மாணவர்க ளுக்கு சித்திரப்போட்டியும், தரம் 6 தொடக்கம் 9 வரையான மாணவர்களுக்கு கட்டுரைப்போட்டியும், தரம் 10 தொடக்கம் 13 வரையான மாணவர்களுக்கு ஆய்வுக்கட்டுரைப் போட்டியும் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்கள் அவர்களது ஆக்கங்களை panaithiruvizha@gmail.com என்ற மின்னஞ்சல் ஊடாகவும் 0771081409 என்ற வட்ஸ்அப் இலக்கத்தினூடாகவும் தபால் 209, எழுதிரள், பலாலி வீதி, கோண்டாவில், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபால் மூலமாகவும் அனுப்பி வைக்க முடியும். (ய)

## பரீட்சை நாள்களில் மின்தடை இல்லை!

கொழும்பு, ஜன. 19

க.பொ.த உயர்தரப் பரீட்சை இடம்பெறவுள்ள 14 நாள்களுக்கு மின்தடை இடம்பெறாது என்று அமைச் சரவைப் பேச்சாளரும், வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித் தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். பந்துல குணவர்த்தன மேலும் தெரிவித்ததாவது:-

க.பொ.த உயர்தரப் பரீட்சை நடைபெறும் 14 நாள்க ளுக்கு எந்தவித இடையூறும் இன்றி நாடு பூராகவும் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக் கப்படும் என்று மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜே சேகர தெரிவித்துள்ளார். பரீட்சை எழுதும் மாண வர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ம-14)

### பேருந்திலிருந்து வீழ்ந்து பெண்ணொருவர் காயம்

பேருந்திலிருந்து இறங்கும்போது வீழ்ந்ததில் பெண் காயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தி னம் செவ்வாய்க்கிழமை மிருசுவிலில் இடம்பெற்றது. அதேபகுதியைச் சேர்ந்த 46 வயதான குடும்பப் பெண்ணே இவ்வாறு காயமடைந்துள்ளார். காய மடைந்த பெண் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ச-9)

## எலி கடித்த உணவுப்பொருளை விற்றவர் மீது நடவடிக்கை

சாவகச்சேரி ஜன.19

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட மட்டுவில் பொதுச்சு காதார பரிசோதகர் பிரிவில் எலி கடித்த உணவுப் பதார்த்தங்களை விற்பனைக்கு வைத்திருந்த குற்றச்சாட்டில் வர்த்தகருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் கடந்த புதன்கிழமை மட்டுவில் சரசாலை ஆகிய பகுதிகளிலுள்ள உணவகங்கள், பலசரக்கு விற்பனை நிலையங்கள் திடீர்ப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போது மட்டுவில் பொதுச்சுகா தார பரிசோதகர் பிரிவிலுள்ள விற்பனை நிலையமொன்றில் எலி கடித்த உணவுப் பொருள்கள் விற்பனைக்கு வைக்கப்பட் டிருந்தமை கண்டறியப்பட்ட நிலையில் வர்த்தகர் சட்டநடவடிக்கைக்கு உட்ப டுத்தப்பட்டார். அத்துடன் ஐந்து வர்த்தக நிலையங்களில் கண்டறியப்பட்ட காலா வதியான உணவுப் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன. (ச-9)

## இலங்கையின் கடன் தொகை 25 ட்ரில்லியனாக உயர்வு

கொழும்பு, ஜன. 19

அரசாங்கத்தின் மொத்த கடன் தொகை 25 ட்ரில்லியன் ரூபாவை கடந்துள்ளது எனத் தெரிவிக் கப்படுகிறது. இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட புதிய அறிக்கையில் இந்த விடயம் குறிப் பிடப்பட்டுள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டு ஒக் ரோபர் மாத நிலவரத்தின்படி கடன் தொகை 25 ட்ரில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. உள்நாட்டு கடன்தொகை அதிகரிப்பு காரண மாக இவ்வாறு அரசின் மொத்த கடன்தொகை அதிகரித்துள்ளது என அந்த அறிக்கையில் தெரிவிக் கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கத் தூதுவரை சாடுகின்றது சீனா!!!

கொழும்பு, ஜன. 19

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்த கருத்துக்காக இலங்கைக்கான சீனத் தூதரகம் அவரைக் கடுமையாகச் சாடியுள்ளது.

'இலங்கையின் கடன் மறுசீரமைப்புத் தொடர்பான பிரிட்டன் தொலைக்காட்சி நிகழ்ச்சியின்போது எங்களின் அமெரிக்க நண்பர், 'சீனா சீனா' என்ற மந்திரத்தை ஓதினார். சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்களுக்கு சீனா பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்று அவர் தெரிவித்தார்.

தனது ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களுக்கு முன்னர் எங்களின் அமெரிக்க சகா சில கேள்விகளைக் கேட்டிருக்கவேண்டும். சர்வதேச நாணயநிதியத்தில் முக்கியமான கொள்கை முடிவுகள் தொடர்பான வீட்டோ அதிகாரத்துடன் அதிகளவு பங்குகளை கொண்டுள்ளது யார்? 2020 இல் 3 ட்ரில்லியன் டொலருக்கு மேல் டொலரை அச்சடித்தது யார்? இலங்கை வங்குரோத்து நிலையை அடைந்ததும் உடனடியாக தனது நீதிமன்றத்தில் இலங்கைக்கு எதிராக வழக்குத் தொடுத்தது யார்? என்பதே இந்தக் கேள்விகள். சீனாவிடமிருந்து அரிசி, டீசல் ,மருந்து. பாடசாலைச் சீருடைகளுக்கான துணி போன்றவற்றை இலங்கை ஏற்கனவே பெற்றுள்ள நிலையில் இலங்கை மக்களுக்கு உதவுவது என்ற வாக்குறுதியிலிருந்து அமெரிக்கா எவ்வாறு பின்வாங்கியுள்ளது என்பது குறித்து பொதுமக்கள் அறிய விரும்புவார்கள். சீனா எந்த நிபந்தனையுமற்ற அர்ப்பணிப்பான செயற்பாடுகளைப் பின்பற்றும் அதேவேளை அமெரிக்க உதவிக்கு ஏன் முன்நிபந்தனைகள் எனக் கேள்வி கேட்பதற்கு மக்கள் விரும்புவார்கள். சுயபரிசோதனையை மேற்கொள்வதற்கு பதில், பாழாக்கிய குற்றச்சாட்டுகளை எங்கள் அமெரிக்க சகா முன்வைப்பது கபடநாடகம் அல்லவா? இலங்கை ஒரு நல்ல சூழ்நிலையில் இருப்பதற்கு அவசியமான தீர்க்கரமான தீர்மானங்களை ஏன் அவர்கள் சர்வதேச நாணய நிதியத்தில் எடுக்கவில்லை? அல்லது இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் கசப்பை ஏற்படுத்துவதற்கு பதில் அவர்கள் அச்சிடும் மிகப்பெருமளவு டொலரிலிருந்து ஏன் அவர்கள் இலங்கைக்கு நிதியை வழங்கவில்லை?' - என்று சீனா கேள்வி எழுப்பியுள்ளது. (அ-ஒ-இ)

சிறுமியை கர்ப்பமாக்கி

# 'கிளினிக்கு' அழைத்துவந்த இளைஞன் கைதானார்!!!

முல்லைத்தீவு, ஜன. 19

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சிறுமியுடன் குடும்பம் நடத்தி அவரைக் கர்ப்பமாக்கிய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதே பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் 21 வயதான இளைஞர் 15 வயதுடைய சிறுமியுடன் கடந்த 8 மாத காலமாக குடும்பமாக வாழ்ந்து வந்துள்ளார். சிறுமி கர்ப்பமாகியுள்ள நிலையில், கர்ப்பவதி கிளினிக்குக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு சென்றபோது சட்டமருத்துவ அதிகாரிகள் சிறுமியின் வயது 15 என்று அறிந்ததைத் தொடர்ந்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

அதற்கு அமைவாக இளைஞன் கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் முன்னிலைப்படுத்தப்பட்ட போது எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டுள்ளது.

சிறுமியை சட்டத்துக்கு முரணாக குடும்பமாக வாழவைத்த சிறுமியின் பெற்றோரை விசாரணை செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளார்கள். (அ-ஒ-19)

# ஜெய்சங்கர் இன்று இலங்கை வருகை

*கொழும்பு, ஜன. 19*

*இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கைக்கு இன்று வரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பயணத்தின் போது, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியுடன் உத்தியோகபூர்வ கலந்துரையாடல்களை மேற்கொள்வதுடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன மற்றும் பிரமுகர்களைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார். வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருடன், இணைச் செயலர் புனித் அகர்வால், இயக்குநர் சந்தீப் குமார் பையப்பு, துணைச் செயலர் நிதி சௌத்ரி மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் துணைச் செயலர் ரகூ பூரி ஆகியோரும் வருகைத்தரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)*

மின்தடை நேரத்தில்

# பியர் போத்தலால் தாக்கி ரூபா 5 லட்சம் கொள்ளை

யாழ்ப்பாணம், ஜன. 19



கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்வியங்காட்டு சந்திப் பகுதியில் உள்ள பலசரக்கு வர்த்தக நிலையமொன்றில் மின்சாரம் தடைபட்ட நேரத்தில் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரவுவேளை மின்சாரம் தடைப்பட்டபோது, திடீரென 3 மோட்டார் சைக்கிள்களில் 3 வாள் மற்றும் இரு பொல்லுகளுடன் வருகை தந்த 5 பேர் அடங்கிய வன்முறைக் குழு கடையில் இருந்த தொலைக்காட்சி பெட்டி உட்பட பொருள்களை தாக்கியதோடு வியாபார நிலைய உரிமையாளருக்கு பியர் போத்தலால் எறிந்துள்ளது. உரிமையாளர் காயமடைந்த நிலையில் பணப் பெட்டியில் வைத்திருந்த ஐந்து லட்சம் ரூபா பணத்தையும் கொள்ளையடித்து தப்பிச்சென்றுள்ளது.

கொள்ளையர்களின் தாக்குதலில் காயமடைந்த உரிமையாளர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-125)

# தேங்காய் வீழ்ந்து ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 19



அராலி மத்தி பகுதியைச சேர்ந்த ஒருவரின் நெஞ்சில் தேங்காய் வீழ்ந்ததால் உயிரிழந்துள்ளார்.

சிவானந்தன் கஜாணன் (வயது - 39) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சாரதியாக பணிபுரியும் அவர் கடந்த 16ஆம் திகதி தென்னை மரத்தின் கீழ் ஓய்வெடுத்துக்கொண்டிருந்தார். அப்போது எதிர்பாராதவிதமாக அவரது நெஞ்சுப் பகுதி மீது தேங்காய் ஒன்று விழுந்தது. அவர் மறுநாள் மருத்துவமனைக்குச் செல்லும்போது உயிரிழந்துள்ளார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் உடல் நேற்றுக் கையளிக்கப்பட்டது. (அ-ஒ-27)

# சுயேச்சையாகக் களமிறங்கும் வல்வெட்டி நகரசபைத் தலைவர்!

யாழ்ப்பாணம், ஜன. 19

வல்வெட்டித்துறை நகர சபையின் தற்போதைய தலைவர் இ.சுரேன் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிடவுள்ளார். அதற்கான கட்டுப்பணம் நேற்று செலுத்தப்பட்டுள்ளது.

இ.சுரேன் தலைமையில் தற்போது நகர சபையின் உறுப்பினர்களாக உள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர்கள் இருவரும், ஈ.பி.டி.பி. கட்சி உறுப்பினர் ஒருவரும் இந்த சுயேச்சைக் குழுவில் போட்டியிடுகின்றனர்.

தற்போதைய உறுப்பினர்களில் வேறு சிலரும் தவிசாளருடன் இணைந்து போட்டியிடுவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இ.சுரேன் கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றிருந்தார். (அ-ஒ-26)

# யாழ்.வவு.வில் கட்டுப்பணம் செலுத்தியது சமத்துவக் கட்சி

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை யாழ்ப்பாணம்மற்றும்வவுனியாமாவட்டங்களில் சமத்துவக் கட்சி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை செலுத்தியது.

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மு.சந்திரகுமார் தலைமையிலான சமத்துவக்கட்சியினரால்கட்டுப்பணம்செலுத்தப்பட்டது. சமத்துவக்கட்சிவவுனியாவில் வெங்கல செட்டிக்குளம், வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபை மற்றும் யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறை நகர சபை ஆகியவற்றில் வேட்பாளர்களை களமிறக்கவுள்ளது.

கனடாவில் வேலைவாய்ப்பு, கல்வி-கருத்தரங்கு
Hotel Managment / Health care
போன்ற துறைகளில் Work Permit
எடுப்பதற்கான வழிகாட்டல்கள்
மற்றும் Student Visa விற்கான
ஆலோசனைகளும் அனுமதிகளும்
கனடாவிலிருந்து வருகைதந்திருக்கும்
அங்கீகரிக்கப்பட்ட கனடிய குடிவரவு
ஆலோசகரால் நேரடியாக வழங்கப்படும்
CANADA MIGRATION PILOT
திகதி 21.01.2023 (சனிக்கிழமை) நேரம்- 12 மணி
கட்டணம் :- 2000/= (மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள்)
CIMS COLLEGE 0777-068-777
49A சபல் லேன், யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DLB அபிவிருத்தி லொத்தர்

# 40 வருட அபிமானம்!

மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நிதியத்தினால் மாணவர்களின் கல்விக்கண்ணை திறந்து..

நோயாளர்களை குணப்படுத்துவதன் மூலம் சுகாதார துறையின் மேன்மைக்காக செயற்படும்..

அனைத்து திசைகளிலும் கோடீஸ்வரர்கள், இலட்சாதிபதிகளை உருவாக்கி இலங்கை மக்களின் வாழ்க்கைக்கு ஒளியூட்டிய

## அபிவிருத்தி லொத்தர் வெற்றிகரமாக 40 வது ஆண்டினை கடந்து

மென்மேலும் புதியனவற்றினை கொண்டுவருவதுடன் உங்களுக்காக முன்னோக்கி..

அதற்காக அர்ப்பணிப்புடன் எம்மோடு கைக்கோர்த்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் விநியோக விற்பனை முகவர்கள் மற்றும் விற்பனை முகவர் வலையமைப்பின் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம்.



DLB DEVELOPMENT LOTTERIES 40 Anniversary

அபிவிருத்தி லொத்தர் சபை

www.dlb.lk

## மண்டபத்தைப் புனரமைக்குக; பொதுமக்கள் கோரிக்கை



அக்கராயன் மேற்கு பொது நோக்கு மண்டபத்தைப் புனரமைத்துத் தரவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2010ஆம் ஆண்டின் பின்னர் அக்கராயன் மேற்கில் பொதுமண்டபம் அமைக்கப்பட்டு கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் சங்கம் ஆகியவற்றின் செயற்பாட்டுக்கு ஒப்படைக்கப்பட்டது.

ஆனால், தற்போது பொது மண்டபத்தின் கூரை காற்றால் தூக்கி வீசப்பட்டுள்ளது. இந்த நிலையில் பொதுமண்டபத்தின் கூரைப் பகுதியைப் புனரமைத்து பொதுப் பயன்பாட்டுக்கு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-14-13)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இன்னும் எத்தனைகாலம்தான்...?

13ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு எக்காரணம் கொண்டும் இடமளிக்கமாட்டோம் என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றார் பெரமுனவின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் வீரசேகர. 'வீடு எரியும் போது அந்தத் தீயில் இருந்து புகைப்பிடிப்பதைப்போன்று நாட்டின் நலிவு நிலையை, பொருளாதாரப் பின்னடைவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் புலம்பெயர் தமிழர்களும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முனைகின்றனர். இதனால், அவர்களின் முயற்சியை நாம் கடுமையாக எதிர்ப்போம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் புலம்பெயர் அமைப்புக்களினதும் விருப்பத்துக்கு அமைவாக 13ஆவது திருத்தத்தின் அத்தனை அம்சங்களையும் முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது' – என்றும் திட்டவட்டம் காட்டியிருக்கின்றார் வீரசேகர.

வீரசேகர பிரதிநிதித்துவம் செய்யும் பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச, தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக 13க்கும் அப்பால் (13 பிளஸ்) தீர்வை வழங்கத் தயார் என்று ஜனாதிபதி ரணிலிடம் அண்மையில் நாடாளுமன்றத்தில் வைத்துத் தெரிவித்திருந்தார். இனப்பிரச்சினைக்கான சர்வகட்சிப் பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கு சில தினங்களுக்கு முன்னதாகவே மஹிந்த இந்த நிலைப்பாட்டை நாடாளுமன்றில் பகிரங்கப்படுத்தியிருந்தார். ஆனால், 13 பிளஸ் என்ற மஹிந்தவின் தீர்வுத்திட்டம் வெறும் வாய்ச்சொல் என்று அப்போதே விமர்சிக்கப்பட்டது. சர்வகட்சிப் பேச்சுக்குள் தமிழ்த் தரப்பை இழுப்பதற்காகவும் அந்தப் பேச்சின் மூலம் தமிழர்களுக்கு தீர்வொன்றை வழங்குவதற்கு முனைப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன என்ற கவனக்குவிவை சர்வதேசத்தில் பெறுவதற்காகவுமே இந்தப் பித்தலாட்டம் என்று அரசியல் அவதானிகளும், தமிழ்த் தேசியப் பற்றாளர்களும், சிவில் சமூக அமைப்புகளும் சுட்டிக்காட்டியிருந்தன. இப்படியானதொரு பின்னணியில்தான் நாடாளுமன்றத்தில் வீரசேகரவிடமிருந்து வெளிப்பட்டிருக்கின்றது இந்தக் கருத்து.


சர்வகட்சிப் பேச்சின் மூலம் எதிர்வரும் சுதந்திர தினத்துக்குள் (பெப்ரவரி 4) தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படும் என்றும் அது அனைவரும் ஏற்கும்படியான தீர்வாக இருக்கும் என்றும் ரணில் அறிவித்தபோதே, அவரின் அறிவிப்பின் சாத்தியப்பாடுகள் குறித்த பல்வேறு சந்தேகத் தன்மைகள் எழுப்பப்பட்டன. ஏனெனில் வீரசேகர போன்றவர்களை அதிகமாகக் கொண்டிருக்கும் பெரமுனவின் ஆதரவுடன் ஆட்சியேறிய ரணில், இத்தகையவர்களை மீறி தமிழர்களுக்குத் தீர்வொன்றை தருவதென்பது சாத்தியமற்றதே. அவ்வாறு ஒரு தீர்வைத் தருகின்றார் என்றால், அது தமிழர்கள் கோரும் தீர்வாக – தமிழர்களின் அபிலாஷைகளுக்கு ஏற்ப அமையப்பெற்ற தீர்வாக அல்லாமல் வெறும் கண்துடைப்பாகவே அமையும். இவ்வாறிருக்கையில், ரணில் அறிவித்த 'தமிழர்களுக்குத் தீர்வு' என்பதன் பின்னாலுள்ள சாத்தியப்பாடுகளையும் நியாயத்தன்மையையும் தீர்வின் உள்ளடக்கத்தையும் வீரசேகர நன்றாகவே கட்டியம் செய்திருக்கின்றார்.

கோத்தாபய அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் நாடளாவிய ரீதியில் தீவிரம்பெற்றபோது இனவாதத்துக்கு எதிரான போராட்டங்கள் நாட்டில் வலுத்திருந்தபோது (அரகலய போராட்டக்காலம்) 'தேள் கொட்டிய திருடன்போல்' இருந்த இடம் தெரியாமல் இருந்த வீரசேகர, இந்தியாவின் கடன்மறுசீரமைப்பு கைகூடி, நாணய நிதியத்தின் 2.9 பில்லியன் டொலர் கைக்கெட்டும் தூரத்துக்கு வந்தபின்னர் நாடாளுமன்றத்தில் வீராப்புக் காட்டுவதெல்லாம் முதுகெலும்புத்தனமான செயலல்ல. உண்மையில் வீரசேகரவின் கருத்துக்கள் நகைப்புக்குரியனவே அன்றி வேறில்லை.

ரணில் ஒன்றும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு மக்கள் வழங்கிய ஆணையால் ஜனாதிபதி பதவிக்கு வந்தவர் அல்லர். பெரமுனவின் அத்திபாரத்தில்தான் அவர் தன் கட்டடத்தைக் கட்டமைத்துள்ளார். இவ்வாறிருக்கையில், வீரசேகர போன்றோரைத்தாண்டி – அவர்களின் எதிர்ப்புக்கு அப்பால் சென்று, தான் மீண்டும் மீண்டும் தெரிவிக்கும் 'அனைவரும் ஏற்கும்படியான தீர்வொன்றை' எவ்வாறு முன்வைப்பார் என்ற சாத்தியப்பாடுகளை – ஏதுநிலைகளை ரணில் முதலில் பட்டவர்த்தனமாக்கவேண்டும். தந்திரச்செயல்கள் தாக்குப்பிடிப்பதும் இன்னும் எத்தனைகாலம்தான்?

## நாளொரு நல்வார்த்தை

"உலகை வெல்ல கப்பல் நிறைய ஆயுதம் வேண்டாம்; ஒரு கை நிறைய வலிமை இருந்தாலே போதும்" –ஜேர்மனியப் பழமொழி




# நாணய நிதியத்துடன் ஏப்ரலுக்குள் ஒப்பந்தம்

## அமைச்சர் பந்துல தகவல்



கொழும்பு, ஜன. 19

இலங்கையின் பிரதான கடன் வழங்குனர்களாக இந்தியா, சீனா மற்றும் ஜப்பானிடமிருந்து கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சாதகமான பதில் கிடைக்கப்பெற்றுள்ளது. எனவே ஏப்ரலுக்குள் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தில் கையெழுத்திட முடியும் என்று அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: 'கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் சாதகமான பதில் கிடைத்துள்ளது என்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சரால் அமைச்சரவைக்கு தெரிவிக்கப்பட்டது. இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் என்பவற்றுடன் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட்டு வருவதாகவும் அந்த இணக்கப்பாட்டுக்கமைய சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தில் இவ்வாண்டின் முதற் காலாண்டுக்குள் கையெழுத்திட வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது' என்றார். (ம)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

# நிலந்த ஜயவர்த்தன சார்பில் ஆஜராக சட்டமா அதிபர் மறுப்பு

கொழும்பு, ஜன. 19

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் வழக்குகளில் முன்னாள் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரியான பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்த்தன சார்பில் ஆஜராகப் போவதில்லை என்று சட்டமா அதிபர் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் நேற்றுப் புதன்கிழமை அறிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கும், பலத்த காயமடைந்தவர்களுக்கும் இழப்பீடு வழங்கக்கோரி பாதிக்கப்பட்ட 108 பேர் 108 வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளனர். இந்த வழக்குகளில் முன்னாள் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரியான பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்த்தன குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். 108 நஷ்டஈடு கோரும் வழக்குகள் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே சட்டமா அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(ஒ-14.இ)

**நாளை** 20.01.2023 வெள்ளிக்கிழமை தை 06

சுபநேரம் : 06.35 - 08.05
ராகுகாலம் : 11.05 - 12.35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைப்பெடுக்கும் நிலையில் முல்லை மதவாளசிங்கம் குளம்

### புனரமைப்புப் பணிகளை முன்னெடுக்கக் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன. 19

முல்லைத்தீவு மதவாளசிங்கம் குளத்தின் அணைக்கட்டின் உட்பகுதி சேதமடைந்துள்ளதால் குளம் உடைப்பெடுக்கும் நிலையில் உள்ளது என்று கிராம மீனவர் அமைப்பு எச்சரித்துள்ளது.



நீர்மட்டம் முழுமையாகவுள்ள குளத்தின் அணைக்கட்டின் உட்பகுதியில் காணப்படுகின்ற சேதங்கள் காரணமாக குளம் உடைப்பெடுக்கக் கூடிய நிலைமை காணப்படுகின்றது. 16 அடி முழுமையான நீர் மட்டத்தைக் கொண்டு 600 ஏக்கருக்கு நீர்ப்பாசனம் மேற்கொள்ளக்கூடிய குளமாக இந்தக் குளம் அமைந்துள்ளது. இந்தக் குளத்தின் கீழ் 58 வரையான நன்னீர் மீன்பிடி குடும்பங்கள் வாழ்வாதாரத்தை நம்பியுள்ளனர். குளம் உடைப்பெடுத்தால் மீனவ குடும்பங்கள் வாழ்வாதாரத்தை இழக்கும் நிலை உருவாகும். இந்த நிலையில் குளத்தின் அணைக்கட்டு சேதமடைந்ததை முத்தையன்கட்டு நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவு அதிகாரிகள் மற்றும் விவசாயத் திணைக்கள அதிகாரிகள் கடந்த திங்கட்கிழமை மாலை பார்வையிட்டனர். குளம் உடைப்பெடுக்காமல் பாதுகாப்பதற்கு புனரமைப்புப் பணிகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நன்னீர் மீன்பிடியாளர்களும் விவசாயிகளும் கோரிக்கை விடுத்தனர். (எ-14,13)

## பாடசாலை போக்குவரத்துக்கு பேருந்துச் சேவை நடத்துங்கள்

### ஆறுமுகத்தான்குளம் மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன. 19

கரைதுறைப்பற்று ஆறுமுகத்தான்குளம் கிராம மாணவர்கள் பாடசாலைக்கு போக்குவரத்து மேற்கொள்ள பஸ் சேவைகள் நடத்தப்பட வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுதொடர்பில் அவர்கள் தெரிவித்துள்ளதாவது: எமது கிராமத்தில் ஆரம்ப பாடசாலை மட்டுமே உள்ளது. இடைநிலை, உயர்தர வகுப்புகளுக்கு 50 க்கும் மேற்பட்ட மாணவர்கள் எமது கிராமத்தில் இருந்து 5 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள குமுழமுனை மகா வித்தியாலயத்துக்கு சென்று வருகின்றனர். ஆறுமுகத்தான்குள கிராமத்துக்கான பஸ் சேவைகள் இடம்பெறாதமையால் மாணவர்கள் குமுழமுனை பாடசாலைக்குச் செல்வதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

இதுதொடர்பாக இரு ஆண்டுகளுக்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்டச் செயலரிடம் நேரடியாக மனுவொன்று கையளிக்கப்பட்டது.

குமுழமுனைக்கு வருகின்ற பஸ்கள் ஆறுமுகத்தான்குளம் கிராமத்துக்கு வருவதன் மூலம் கிராமத்தில் வாழ்கின்ற 117 குடும்பங்கள் குமுழமுனை, முல்லைத்தீவு நகரம் என்பவற்றுக்கு போக்குவரத்தில் ஈடுபடக் கூடியதாக இருக்கும். எமது போக்குவரத்து நெருக்கடிக்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றனர். (எ-14,13)

## வயாவிளான் ம. கல்லூரியின் 77ஆவது நிறுவுநர் தினம்

யாழ்ப்பாணம், ஜன. 19

வயாவிளான் மத்திய கல்லூரியின் 77ஆவது ஆண்டு நிறுவுநர் தினம் பாடசாலையின் ஆ.சி நடராசா அரங்கில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. வயாவிளான் கல்லூரியின் நிறுவுநர்களான ஈழகேசரி நா.பொன்னையா மற்றும் சட்டத்தரணி வல்லிபுரம் இராசநாயகம் ஆகியோரின் உருவச் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதைத் தொடர்ந்து இராசநாயகம் பிரபந்தம் நூலின் மறு பதிப்பும் வெளியிடப்பட்டது.

கல்லூரி முதல்வர் வே.த.ஜெயந்தனின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்துகொண்டார். (எ-14, 20)

## சைவப்புலவர் சங்கம் நடத்தும் வைரவிழா பட்டமளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன. 19

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்தும் வைரவிழா சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவும் சைவ மாநாடும் இரண்டு அமர்வுகளாக நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

முதலாவது அமர்வு அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் சி.க.கமலநாதன் தலைமையில் சாவகச்சேரி பூமாரி மண்டபத்தில் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்த பிள்ளை அரங்கில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அதன்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2022 ஆம் ஆண்டில் சைவசித்தாந்த முதுகலைமாணி (எம்.ஏ) பட்டம் பெற்ற சைவப்புலவர்கள் கௌரவிப்பு இடம்பெறும்.

அதைத் தொடர்ந்து சைவாகம பூஷணம் விருது, சிவநெறிப் புரவலர் விருது, பௌராணிக ஞான செம்மல் விருது, சைவப் புலவர் மணி விருது, சிவ நெறிப் பிரகாசர் விருது போன்ற விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இரண்டாவது அமர்வு அகில இலங்கை சைவப்புலவர் சங்க உபதலைவர் சைவப்புலவர் சிவானந்தசோதி ஞானசூரியம் தலைமையில் சைவப்புலவர் க.செல்லத்துரை அரங்கில் மாலை 2.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

அதன்போது கலைநிகழ்வுகள் இடம்பெற்று வைரவிழாச் சைவசமய திறன் விருத்திப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பும் இடம் பெறும் என்று ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (எ-14,159)

## கடந்த இரண்டு வாரத்தில் 255 டெங்குத் தொற்றாளர்கள்!

### யாழ்ப்பாண நிலைமை மோசம்

யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ். மாவட்டத்தில் இந்த மாதத்தின் முதல் இரண்டு வாரங்களுக்குள் 255 டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் முதல் இரண்டு வாரங்களில் 4 ஆயிரத்து 178 டெங்குத் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவாக 871 டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் கம்பஹா மாவட்டத்தில் 846 தொற்றாளர்களும், களுத்துறை மாவட்டத்தில் 224 தொற்றாளர்களும், கண்டியில் 190 தொற்றாளர்களும் இதுவரையான காலப்பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (எ-14,27)

## மெய்வல்லுநர் போட்டிகள் தென்மராட்சியில் இந்த வாரம்

சாவகச்சேரி, ஜன.19

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கான இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இந்த வாரம் இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

2022 ஆம் ஆண்டு கல்வியாண்டின் முதலாம் தவணையில் நடைபெறவேண்டிய மாணவர்களுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் மூன்றாம் தவணையில் நடத்தப்படுகிறது.

மெய்வல்லுநர் போட்டிகளை விரைவில் நடத்தி முடித்து கற்றல் செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டதையடுத்து தெரிவுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றது. இந்த நிலையில் தென்மராட்சியில் பல பாடசாலைகளில் போட்டிகள் இந்த வாரம் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ-14.9)

## மத்தியஸ்த சபை அமர்வில் மாற்றம்

சாவகச்சேரி, ஜன. 19

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் க.பொ.த. உயர்தரப் பரீட்சை நடைபெறவிருப்பதால் சாவகச்சேரி மத்தியஸ்தர் சபையின் அமர்வுகள் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் இடம்பெறுமென சபையின் தவிசாளர் வை.இராசரத்தினம் அறிவித்துள்ளார். ஜனவரி 22, 29, பெப்ரவரி 5 மற்றும் 12 ஆகிய திகதிகளில் அமர்வுகள் இடம்பெறுமெனவும் இந்த தினங்களில் திகதி குறிப்பிடப்பட்டவர்கள் தவறாது சமூகமளிக்குமாறும் மேலும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-9)

## எம்.ஜி.ஆர். பிறந்த தினம் குருநகரில் கொண்டாட்டம்



தமிழக முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் 106ஆவது பிறந்ததினக் கொண்டாட்டம் குருநகர் பகுதியில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

குருநகர் எம்.ஜி.ஆர் நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் குருநகர் பகுதியிலுள்ள எம்.ஜி.ஆரின் சிலையருகில் விழா இடம்பெற்றது.

நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், மாநகரசபை முன்னாள் மேயர் இமானுவேல் ஆனோல்ட் ஆகியோர் கலந்துகொண்டனர். எம்.ஜி.ஆர். நற்பணி மன்றத்தால் பொருளாதாரம் நலிவுற்ற 150 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்களும் கையளிக்கப்பட்டன. (ச-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடு வாடகைக்கு**

சாவகச்சேரி, மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலை வீதியில் வீடு வாடகைக்கு உண்டு. (CV/696)4,6)

076 249 4592




முல்லைத்தீவு குமுழமுனை மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. குறித்த மகா வித்தியாலயத்தின் அதிபரின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.விக்னரூபன் கலந்துகொண்டார்.

(ம-13)



**விற்பனைக்கு**

கொங்கிறீற் மிக்ஸர் நீரிறைக்கும் மோட்டார் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 070 707 1799


## 31ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில் 06 . 06 . 1970



விண்ணில் 20 . 12 . 2022

### அமரர் மார்க்கண்டு சிறீக்குமார்

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (19.01.2023) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் சண்டிலிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

மடத்தடி, சண்டிலிப்பாய். (CS 23014) 4-6) குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 30 . 11 . 1948



இறப்பு 30 . 01 . 2022

### குஞ்சிதபாதம் சரஸ்வதி

திதி:- தேய்பிறை திரயோதசி


ஆண்டொன்று நகர்ந்தாலும்
நம்மை விட்டு அகலாது உங்கள் நினைவுகள்
உங்கள் நினைவுகள் வருகையில்
நிலைகுலைந்து போகின்றோம் அன்னையே
உங்களை நினைக்காத நொடிகளில்லை
அன்பினால், பண்பினால், நட்பினால்
ஆளுமையால், விருந்தோம்பலால் கொடையால்
எங்கள் அனைவரது உள்ளங்களிலும்
குடியிருக்கும் எங்கள் அன்னையை
நாம் என்றென்றும் நினைந்திருப்போம்.

(CS 23007) 4-6)

பத்தானை வீதி,
தாவடி தெற்கு, கொக்குவில்

குடும்பத்தினர்

# டேவிட் பீரிஸ் குழுமத்தின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கில் கோ – கார்டிங்



டேவிட் பீரிஸ் குழுமத்தால் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தற்பொழுது நடைமுறையில் உள்ள வணிகங்களை ஊக்குவிக்கும் விசேட திட்டத்தில் ஒரு படியாக இந்த மாகாணங்களில் கோகார்ட்டிங் விளையாட்டை பிரபலப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டமொன்றை 2023 ஜனவரி 18ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் பண்ணை துறைமுக வீதியிலும், காத்தான்குடி மெரைன் ட்ரைவ் சதுக்கத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் வர்த்தக சம்மேளனங்கள் டேவிட் பீரிஸ் குழுமத்துடன் அண்மையில் நடத்திய கலந்துரையாடலின் விளைவாக இந்த நிகழ்ச்சித் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கோகார்ட்டிங் விளையாட்டை பிரபலப்படுத்துவதன் ஊடாக பிராந்தியத்தில் உள்ள வீரர்களுக்கு தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் செல்வதற்கான வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பது மற்றும் காலத்தின் தேவையாக உள்ள சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்ய ஒத்துழைப்பை வழங்குவது இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

ஜனவரி 18ஆம் திகதி (பி.ப. 3 மணி முதல் பி.ப. 6 மணிவரை) மற்றும் 19ஆம் திகதி (மு.ப 10 மணி முதல் பி.ப 5 மணி வரை) காத்தான்குடி மெரைன் ட்ரைவ் சதுக்கத்திலும், 19 மற்றும் 20ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் பண்ணை வீதியில் மு.ப 10 மணி முதல் 5 மணிவரையும் தற்காலிகமாக நிர்மாணிக்கப்பட்ட மினி கோகார்ட்டிங் பாதையில் முன்னர் தெரிவுசெய்யப்பட்ட கோகார்ட்டிங் செய்பவர்கள் செலுத்த விருப்பதுடன், இந்தப் பொழுதுபோக்கு அம்சத்தை எந்தவொரு நபரும் இலவசமாக வந்து பார்வையிட முடியும்.

டேவிட் பீரிஸ் குழுமத்தில் அங்கம் வகிக்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் பிரதேச மக்கள் பங்குபற்றும் கிரிக்கட் போட்டியும் கோகார்ட்டிங் நிகழ்ச்சித்திட்டத்துக்கு சமாந்தரமாக காத்தான்குடியில் நடத்தப்படும்.

இலங்கையின் முன்னணி வாகன நிறுவனமான டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிறைவட்) லிமிடெட் நிறுவனம் மற்றும் நிதி சேவையை வழங்குவதில் முன்னோடியான அசட்லைன் பைனான்ஸ் லிமிடெட் நிறுவனம் ஆகியவற்றை முன்னணியாகக் கொண்ட டேவிட் பீரிஸ் குழுமம் லொஜிஸ்டிக் மற்றும் நவீன களஞ்சிய வசதி, காப்புறுதி சேவை, காணி மற்றும் சொத்துக்களில் முதலீடு, தகவல் தொழில்நுட்பம், இயற்கை விவசாயம், கடல்சார் மற்றும் கப்பல் சேவைகள், வீட்டுக்கான இலத்திரனியல் பொருள்கள், ரேசிங் மற்றும் பொழுதுபோக்கு போன்ற துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 22 நிறுவனங்களை உள்ளடக்கியுள்ளது.

இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான மேலதிக விபரங்களை 0740231295 (கஜன்) யாழ்ப்பாணம் அல்லது 0777445610 (ரவிச்சந்திரன்) காத்தான்குடி என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 20.08.1943 | 20.12.2022 |

யாழ். வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் மட்டு. கோட்டைக்கல்லாறு மலைமாரி செல்விவேல் வாசத்தை வசிப்பிடமாகவும் கொண்ட


**திருவாட்டி பங்கயச்செல்வி வடிவேல் (பேபி)**
**(முன்னாள் பண்டிதர், யாழ்/வைத்தீஸ்வரா கல்லூரி -பழைய மாணவி)**

கடந்த 20.12.2022 செவ்வாய்க்கிழமையன்று சிவபேறடைந்த என்னுயிரிலும் மேலான அன்புத் தெய்வம், குடும்ப வழிகாட்டி பாசமிகு அம்மாவின் மறைவுச்செய்தி கேட்டு நேரில் வந்து அஞ்சலி செலுத்தி அனுதாபம் தெரிவித்து . அனைத்து வழிகளிலும் உதவி ஒத்தாசைகள் வழங்கி ஆழ்ந்த துயரில் பங் கெடுத்தவர்களுக்கு எனது நன்றிகளை தெரிவிப்ப தோடு 19.01.2023 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெறுகின்ற 31ஆம் நாள் அந்தியேட்டியில் கலந்துகொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

தகவல்-பாமிகு மகன்
செந்தா(வடிவேல் செந்தூர் வடிவேல்)
+94 77 6155 387

மலைமாரி செல்விவேல் வாசம்
கோட்டைக்கல்லாறு-01

## கண்ணீர் அஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 05.08.1953 | 18.01.2023 |


யாழ். வணிகர் கழக முன்னாள் தலைவரும் தற்போது உபதலைவருமான **இ.ஜெனக்குமார்** அவர்களின் மைத்துனர்

**பொன்னுத்துரை சடாச்சரசோதி**

அவர்கள் நேற்று (18.01.2023) புதன்கிழமை காலமானார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**யாழ். வர்த்தக நண்பர்கள்.**

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05.08.1953 | 18.01.2023 |

**பொன்னுத்துரை சடாச்சரசோதி**

கரம்பனை பிறப்பிடமாகவும், கன்னாதிட்டி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சடாச்சரசோதி நேற்று (18.01.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை (அதிபர்) கமலாம்பிகையின் அன்பு மகனும், இராசையா (Procter), நேசமணியின் மருமகனும், ஜெயராணியின் அன்புக் கணவரும், ஜனனியின் (சித்த மருத்துவபீடம் 5ஆம் வருடம், LLB(Hons)) பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான பத்மினி, நகுலன் மற்றும் ரோகிணி, கருணாகரன், வதனி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சாவித்திரி, சிறீரங்கன், இளமுருகன் மற்றும் பரிமேல்அழகன், நித்தியானந்தன், ஜனகன், சத்தியபாமா (தங்கம்), Lion.R.ஜெனக்குமார் (உரிமையாளர் அசோக் நகையகம்), சிவகுமாரி, விஜயகுமாரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2023) வியாழக்கிழமை 154, கன்னாதிட்டி வீதியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் பி.ப 1.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 3573 147 (மைத்துனர்)
077 650 1469 (மகள்)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23.04.1940 | 16.01.2023 |

**ஐயாத்துரை நகுலாம்பிகை**

நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும், 131/2, பருத்தித்துறை வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை நகுலாம்பிகை கடந்த (16.01.2023) திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அம்பலவாணர்- செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவரான பரமேஸ்வரி, புண்ணியவதி, இராஜேஸ்வரி, நல்லராஜா, கருணாதேவி, சகுந்தலாதேவி, நேசடாளிங்தேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஐயம்பிள்ளை, காலஞ்சென்ற ஜெயபாலன், குபேந்திரன், விக்கினேஸ்வரி, ஜீவானந்தம், சண்முகேஸ்வரன், உதயநாதன் ஆகியோரின் மைத்துனியும், சுகந்தன் (லண்டன்), முகுந்தன் (லண்டன்), ஜெயந்தன், சுஜிதினி, சுபாஜினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், திலகா (லண்டன்), கலாநிதி (லண்டன்), சுசிலாம்பிகை (சுவிஸ்), கேதீஸ்பரன் (பிரான்ஸ்), முருகானந்தன் (கட்டார்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சதுர்ஷா, சாயனா, நேகன், தக்ஷயா, அக்ஷயன், தர்கிதன், மிதுனன், பேரினியன், சர்ஜனா, தக்சயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2023) வியாழக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

131/2, பருத்தித்துறை வீதி,
நல்லூர்

தகவல்: குடும்பத்தினர்.

| | |
|---|---|
| சுகந்தன் | - 0044 7474 235865 |
| முகுந்தன் | - 0044 7463778966 |
| சுசிலாம்பிகை | - 0041779604286 |
| கேதீஸ்பரன் | - +33766275 7327 |
| சுஜிதினி | - 0777 1717 49 |
| சுபாஜினி | - 077 2322 460 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2022 உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவச் செல்வங்களுக்கு எமது நல்வாழ்த்துகள்!

நனஜய 2022

2022 ஒகஸ்ட் 1 முதல் 2023 ஜனவரி 31 வரை தொடர்ச்சியாக உங்களது BOC 18+ அல்லது 18 Smart Gen கணக்கில் ஆகக்குறைந்தது 10,000 ரூபாயினை அல்லது 2023 ஜனவரி 23 முதல் தொடர்ச்சியாக 6 மாதங்கள் ஆகக்குறைந்தது 10,000 ரூபாயினை BOC 18+ அல்லது 18 Smart Gen கணக்கில் வைத்திருங்கள்.
ரூ.30 மில்லியனுக்கும் மேற்பட்ட நனஜய புலமைப்பரிசில்களை வெல்லுங்கள்.

மேலதிக விபரங்கள் BOC வலைத் தளத்தில், Facebook பக்கத்தில் அல்லது நாடெங்குமுள்ள இலங்கை வங்கிக் கிளைகளில்.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

1975 BOC CALL CENTRE www.boc.lk

A (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்


# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** எதிலும் பொறுமையுடனும் சிந்தித்தும் செயற்படவேண்டிய நாள். முக்கிய முடிவுகள் எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். பேசும் போது பொறுமை கடைப்பிடிக்கவும்.

**இடபம்:** புதிய முயற்சிகள் சாதகமாகும். நண்பர்களால் அனுகூலம் உண்டாகும். முக்கியமான முடிவுகளில் ஆலோசனை அவசியம். உறவினர்களால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**மிதுனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். எதிர்ப்புகளும் இடையூறுகளும் நீங்கும். சகோதரர்கள் மூலம் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் தேவை. குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். செலவுகள் ஏற்படும்.

**சிம்மம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**கன்னி:** தேவையான பணம் இருப்பதால் செலவுகளைச் சமாளித்து விடுவீர்கள். உறவினர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். மனக் கசப்புகள் நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**துலாம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பண உதவி கிடைக்கும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், திடீர் செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும்.

**மகரம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு திடீர் பணவரவுக்கும், திடீர் செலவுகளும் உண்டு.

**கும்பம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். பிள்ளைகள் எதிரிகள் தொல்லை நீங்கும். கடன்கள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும்.

**மீனம்:** இன்று எதிலும் சிந்தித்தும் பொறுமையுடனும் செயற்பட வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.






# சனிப்பெயர்ச்சி பலன்கள் 2023



மனித வாழ்வுக்கு ஓர் அர்த்தத்தை ஏற்படுத்தும் கிரக மூர்த்தி சனீஸ்வரர். கிரகங்களில் மெல்ல நகர்பவர். நீதிமானாகச் செயற்பட்டு அவரவரின் முன்வினைகளுக்கு ஏற்ப உரிய பலாபலன்களைக் கொடுத்து, மனித வாழ்வுக்கு ஓர் அர்த்தத்தை ஏற்படுத்தும் கிரக மூர்த்தி சனீஸ்வரர்.

'ஏழரைச் சனி' என்றதும் பயம் கொள்ளத் தேவையில்லை. அப்படியே அஷ்டமத்துச் சனி, ஜன்மச் சனி போன்ற நிலைகளை எண்ணியும் கலங்க வேண்டியதில்லை. சனி பகவான் நம் வினைகளைக் கரைக்க அருள்செய்பவர்; இன்பதுன்பங்களை வினைப்படி செயற்படுத்தி வாழவைப்பவர்.

**நிகழும் சுபகிருது வருடம் தை மாதம் 3ஆம் நாள் (17.01.2023) செவ்வாய்க்கிழமை அன்று (திருக்கணிதப் பஞ்சாங்கப்படி), தன் சொந்த வீடான மகர ராசியிலிருந்து மற்றொரு சொந்தவீடான கும்பத்துக்கு பெயர்ச்சி ஆகிறார் சனிபகவான்.** இதனால் தனுசு ராசிக்கு ஏழரைச் சனி காலகட்டம் நிறைவடைகிறது. மீன ராசிக்கு ஏழரைச் சனி தொடங்குகிறது. மகர ராசியினருக்கு ஜன்மச்சனி விலகுகிறது.



ஏழரை ஆண்டு காலம் சனி பகவானின் பிடியிலிருந்த இந்த ராசிக் காரர்கள், இதுவரையிலும் பல்வேறு இன்னல்கள், பிரச்சினைகள், போராட்டங்களுக்கு ஆளாகியிருப்பார்கள். அவை யாவும் விலகப்போகின்றன. நீங்கள் தற்போது ஒரு சுதந்திர பறவையைப் போல் பறக்கலாம். வேலை தேடுவது, வியாபாரம் செய்வது, திருமண முயற்சிகள் அனைத்தும் சாதகமாக அமையும். பெண்கள், குழந்தைகளுக்கு ஆரோக்கியம் மேன்படும்.

தன லாபம், குடும்ப ஒற்றுமை, கடன் பிரச்னைகளுத் தீர்வு என எல்லாமே நன்மையாக நடக்கும். கோர்ட்டு வழக்குகள், சொத்துத் தகராறு போன்றவற்றில் உங்களுக்குச் சாதகமான தீர்வு கிடைக்கும்.

மனதில் தைரியமும், உறுதியும் வரக்கூடிய காலம் என்று சொல்லலாம். அலுவலகம் மற்றும் உறவினர்கள் தொடர்பாக இருந்த மனப் பிரச்னைகள், குழப்பங்கள் யாவும் நீங்கும்.

மொத்தத்தில் இந்த ராசி நேயர்களுக்கு சந்தோஷமும் புதிய உற்சாகமும் ஏற்படும் அற்புதமான காலம் இது எனலாம்.

**பெண்களுக்கு:** ஆரவாரம் இல்லாத அமைதியான எதிர்காலம் காத் திருக்கிறது. மனதில் உறுதியோடு வேலைகளைக் கவனிக்கலாம். திருமணம் முதலான சுபகாரியங்கள் நீங்கள் நினைத்தபடி நடந்தேறும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும்; ஒற்றுமை பெருகும். குழந்தை களால் மேன்மை உண்டு. வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு, நினைத்த காரியங்கள் நினைத்தபடி நடந்தேறும்.

**மாணவர்களுக்கு:** நல்ல காலம் பொறந்தாச்சு. படிப்பில் ஆர்வம் பிறக் கும். தேர்வுகளில் வெற்றி, உயர்கல்வியில் முன்னேற்றம் உண்டு. வெளி நாடு சென்று மேற்படிப்பைத் தொடர விரும்பும் மாணவர்கள், அதன் பொருட்டு முயற்சிகளை மேற்கொண்டால் வெற்றி உண்டு. விளையாட்டுத் துறையில் உள்ளவர்களுக்கு விருதும், அங்கீகாரமும் கிடைக்கும்.

**உத்தியோகத்தர்களுக்கு:** தனியார் மற்றும் அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு இடமாற்றம் பதவி உயர்வோடு காத்திருக்கிறது. இதுவரையிலும் வேலை இல்லாமல் தவித்த இந்த ராசி அன்பர்களுக்கு, நல்ல வேலை கிடைக்க வாய்ப்பு உண்டு. நண்பர்கள் மூலம் முயற்சி செய்யும் வெளிநாட்டு வேலை தொடர்பான விஷயங்களும் சாதகமாகும். அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு, அலுவலகத்தில் இருந்த குழப்பங்கள், பணி தொடர்பான வழக்குப் பிரச்சினைகள் முடிவுக்கு வரும்.

**வியாபாரிகளுக்கு:** முன்னேற்றமான காலம். கடன் தொல்லைகள், கூட்டுத் தொழிலில் இருந்த சிக்கல்கள் தீரும். புதிய நண்பர்கள் மற்றும் உறவினர்களின் உதவியால் புதிய வியாபாரம் தொடங்குவீர்கள்.

**பரிகாரம்:** வியாழன் மற்றும் அமாவாசை தினங்களில் அன்னதானம் செய்வது சிறப்பு. சனி வாரம் கருட பகவான் ஸ்துதி சொல்லவும். நெய் தீபம் ஏற்றி துளசி மாலை சாற்றி வழிபட்டால், தடங்கல் நிவர்த்தி ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திடீரென வீதியில் தீப்பற்றிய வாகனம்



யாழ்ப்பாணம், ஜன. 19
யாழ்ப்பாணத்திலிருந்து மரக்கறிகளை ஏற்றிக் கொண்டு வடமராட்சி நோக்கிச் சென்று கொண்டிருந்த படி ரக வாகனம் ஒன்று, திடீரென தீப்பற்றி எரிந்தது.
வல்லைப் பகுதியில் நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. (அ-ஓ-27)

## ஆர்னோல்ட்...

முன்னாள் மேயர் இ. ஆர்னோல்ட் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். மாநகர மேயராக இருந்த ஆர்னோல்ட் சமர்ப்பித்த வரவு – செலவுத் திட்டம் இரு தடவைகள் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து புதிய மேயரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெற்றது. இதில் சட்டத்தரணி வி.மணிவண்ணனிடம் ஒரு வாக்கால் ஆர்னோல்ட் தோல்வியடைந்திருந்தார்.

புதிய மேயராகத் தெரிவு செய்யப்பட்ட வி.மணிவண்ணன் கடந்த ஆண்டு சமர்ப்பித்த வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இரண்டாவது தடவையும் வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்காமல் பதவி துறந்திருந்தார். இந்த நிலையில் மீண்டும் மேயர் தெரிவு இடம்பெற்றால் அதனைச் சவாலுக்கு உட்படுத்துவேன் என்று அவர் தெரிவித்திருந்தாலும் இன்று மேயர் தெரிவு இடம்பெறவுள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக களம்கண்டு 16 பேர் வெற்றி பெற்றிருந்தனர். தற்போது கூட்டமைப்பிலிருந்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வெளியேறியிருந்தாலும், புளொட் மற்றும் ரெலோ என்பன இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் களமிறக்கப்படும் ஆர்னோல்ட்டை ஆதரிக்கவுள்ளதாகத் தெரியவருகின்றது.

'மேயர் பதவி தேசியக் கட்சிக்குச் செல்லக் கூடாது. மணிவண்ணன் கடந்த காலங்களில் தன்னிச்சையாகச் செயற்பட்டிருந்தார். எனவே அவர் மீளவும் மேயராகத் தெரிவு செய்யப்படக்கூடாது' என்ற காரணங்களின் அடிப்படையில் ஆர்னோல்ட்டை ஆதரிப்பதற்குத் தீர்மானித்துள்ளதாக ரெலோவைச் சேர்ந்த பிரதி முதல்வர் து.ஈசன் தெரிவித்தார்.

இதேவேளை, ஆர்னோல்ட்டை எதிர்த்து வி.மணிவண்ணன் களமிறங்குவார் என்று முன்னர் கூறப்பட்டபோதும் அது நடைபெறாது என்று தெரியவருகின்றது. மணிவண்ணன் தோல்வியடையக் கூடும் என்பதால், உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொண்டுள்ள சமயத்தில் அது பின்னடைவாகிவிடும் என்று கருதுவதால் அவர் போட்டியிடுவதை சிலவேளைகளில் தவிர்க்கக் கூடும். அதேநேரம் அவரது அணி சார்பில் இன்னொருவர் களமிறங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் ஆர்னோல்ட் களமிறங்குவது தொடர்பில் கட்சிக்குள் ஒருமித்த நிலைப்பாடு நேற்று முன்தினம் காணப்படவில்லையாயினும் நேற்று அவருக்கு ஆதரவான ஒருமித்த நிலைப்பாடு ஏற்பட்டது.

ஈ.பி.டி.பி.யிலிருந்து தற்போதைய உள்ளூராட்சித் தேர்தலில் விலகியுள்ள சில உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஓர் உறுப்பினரும் ஆர்னோல்ட்டை ஆதரிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிலவேளைகளில் உறுப்பினர்களில் 50 சதவீதத்துக்கு அதிகமானவர்கள் வருகை தராது விட்டு தெரிவை ஒத்திவைக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படக் கூடும் என்றும் சில வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (அ-ஓ-5)

## ச.தொ.ச.வில்...

நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வெள்ளை சீனி 1 கிலோ 2 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 216 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சிவப்பு பச்சை அரிசி 1 கிலோ 8 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 187 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வெள்ளைப் பச்சை அரிசி (உள்நாடு) 1 கிலோ 10 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 179 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சம்பா (உள்நாடு) 1 கிலோ 10 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 210 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வெள்ளை நாடு அரிசி (உள்நாடு) 1 கிலோ 9 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 189 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வெள்ளை நாடு அரிசி (இறக்குமதி) 1 கிலோ 8 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 180 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கீரிச் சம்பா 1 கிலோ 6 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 239 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சிவப்பு பருப்பு 1 கிலோ 7 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 370 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. செத்தல் மிளகாய் 1 கிலோ 50 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 1,730 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கோதுமை மா 1 கிலோ 5 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 235 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நெத்தலி 1 கிலோ 20 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை ஆயிரத்து 100 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ-ஓ-இ)

## புலிகளின்...

பாத்திரவாளியாகிவிட்டீர்கள் - இவ்வாறு இரா.சம்பந்தனுக்குச் சுட்டிக்காட்டியுள்ளார் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கொழும்புக்கிளை தலைவரும், மத்திய குழு, அரசியல்குழு உறுப்பினருமான கே.வி.தவராசா.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரான இரா.சம்பந்தனுக்கு அனுப்பி வைத்துள்ள காட்டமான கடிதத்திலேயே இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

'நீங்கள் தமிழ்த் தேசியத்தின் அரசியல் இருப்புக்கு சாவுமணியடிப்பீர்கள் என்பது பலருக்கும் அப்போது தெரிந்திருந்தது. ஆனாலும் உங்களில் மாற்றம் வரும் என்ற நம்பிக்கையோடு மக்களும் காத்திருந்தார்கள். விசுவாசிகளான நாமும் காத்திருந்தோம். ஆனால் மஹிந்த நாட்டைக் காப்பாற்றியதாலேயே திருகோணமலைக்கு சுதந்திரமாகச் சென்று வரமுடிகின்றது எனப் பாராட்டியதுடன், 2020ஆம் ஆண்டு தேர்தல் முடிந்த பின்னர் நடைபெற்ற மத்திய குழுக் கூட்டத்தில் பிரதேசவாதத்தை கக்கியதுடன் தேசியத் தலைவர் மஹிந்த என நாடாளுமன்றத்தில் நீங்கள் புகழாரமும் சூட்டினீர்கள்' என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தின் விவரம் வருமாறு;

போர் முடிவுற்ற பின்னர் தமிழ் மக்களுக்கு இருந்த ஒரேயொரு கலங்கரை விளக்கம் கூட்டமைப்பு மட்டுமே. தமிழினத்தின் விடுதலையை இலக்காகக் கொண்டுதான் ஆயுதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது . ஒருபலம் பொருந்திய இயக்கமாகப் புலிகள் நிலைபெற்ற காலத்தில் தமிழரின் அரசியல் இருப்பை உறுதிப்படுத்தவே அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் இணைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

தமிழரின் அரசியல் இணைப்பும் ஒற்றுமையும் ஒரேகொள்கைக்கான அணியாகவும் மக்களின் அங்கீகாரமாகவும் 2010 ஆண்டுத் தேர்தல் வரை ஒவ்வொரு தேர்தல் முடிவும் வலுவானதொரு செய்தியை பெரும்பான்மை அரசியல் தலைமைகளுக்குச் சொல்லிக் கொண்டே இருந்தன.

ஆனால் சில ஒட்டகங்கள் கூட்டமைப்பெனும் கூடாரத்துக்குள் நுழைந்ததோடு, கூட்டமைப்பு தேய்ந்து கொண்டே சென்று 2023 இல் அமாவாசையாகி எல்லாம் முடிந்துவிட்டது போன்று தோன்றுகின்றது.

கம்பீரமாகத் தமிழரின் அரசியல் இருப்பைக் கர்ஜனையோடு வெளிப்படுத்திய கூட்டமைப்பு இப்போது இல்லை. கூட்டமைப்பின் இந்த நிலைக்கு நீங்களும் பிரதான காரணகர்த்தாவாகிவிட்டீர்கள்.

வரலாற்றின் வசைச்சொல்லுக்கு இலக்காகிவிட்டீர்கள். 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு' என்று தலைப்பிட்டு மிக மிக உருக்கமான வேண்டுகோளை கடந்த காலங்களில் பகிரங்கமாக ஊடகங்களில் வெளியிட்டதோடு உங்களுக்கும் அனுப்பிவைத்திருந்தேன். எதை நீங்கள் செய்யக் கூடாது என்று உங்களிடம் அந்தக் கடிதங்கள் வாயிலாக கெஞ்சுதலாக வேண்டியிருந்தேனோ அவை அனைத்தையும் இப்போது செய்து முடித்துவிட்டு தன்னந்தனியாக இருக்கின்றீர்கள்.

தமிழ் அரசுக் கட்சியைத் தவிர இப்போது ஒரு கட்சியும் இல்லாத நிலையில் தனிக் கட்சி கூட்டமைப்பாகாது என்பதை நீங்கள் அறிவீர்களா? கூட்டமைப்பு இல்லாமல் அதன் தலைவர் என்ற பதவியும் பறிபோய், வெறும் நாடாளுமன்ற உறுப்பினராக நீங்கள் நிற்பதைக் காண மனம் சகிக்கவில்லை.

இனிமேல் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று நீங்கள் எந்த முகத்தோடு போய் ரணிலுடன் பேச்சு நடத்தமுடியும்?

கூட்டமைப்பு இருக்கும் வரையே உங்களுக்கான மரியாதை மக்களிடையே மட்டுமல்ல அரசியல் தலைவர்களிடமும் இருந்தது. ஆனால் கூட்டமைப்பே இல்லையென்றான பின்னர், அற்ற குளத்து அறுநீர்ப்பறவையாக அவையெல்லாமே பறந்தோடிப் போய்விட்டதை ஏன் இன்னும் உணராதிருக்கிறீர்கள் என்பது ஆச்சரியமே. ஒருகாலத்தில் எங்கள் இனத்தின் ஆளுமை மிக்க அரசியல்தலைவர் என்ற விம்பம் உங்களுக்கு எம்மிடையே இருந்தது. அதை நீங்களே உடைத்துவிட்டீர்கள். காலம் உங்கள் கடைசிச் செயலையே கணக்கில் எடுக்கும். அதனால் எப்போதைக்கும் கூட்டமைப்பைச் சிதைத்தவர் சம்பந்தர் என்ற தீராப்பழியை நீங்கள் சுமப்பதைக் காண எம்மாலும் சகிக்க முடியாதுதான். ஆனாலும் அதுவே விதி.

'சேராத இடம் சேர்ந்து' வஞ்சத்தில் வீழ்ந்தீர் சம்பந்தரே என்று உங்களுக்காக அனுதாபப்பட மட்டுமே எம்மால் முடியும் - என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஓ-இ)

15ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
04.02.1944



விண்ணில்
19.01.2008

அமரர் இராசப்பு அல்பிரட் அருமைநாயகம்

மூவைந்து ஆண்டுகள் சென்றாலும்-மாறாதப்பா
உன் நினைவுகள்
நீ விட்டுச் சென்ற நினைவுகள் எம்மை
கட்டியணைக்குதப்பா எந்நேரமும்
வாடிக்கிடக்கிறோம் எம்மை காத்திட
மறுபடியும் தோன்றுவாயா இம்மண்ணில்
நம் தந்தையாக

உம் நினைவுகளுடன்
மேரி இல்லம் நாம்
கரவெட்டி வடக்கு,வதிரி. மகன்-றொபின்சன்(UK)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சொல்லை...

யாழ். மாவட்டச் செயலராகக் கடமையாற்றிய க.மகேசன் பதவியுயர்வுடன் இடமாற்றம் பெற்று கடந்த முதலாம் திகதி வெளியேறியிருந்தார். இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் யாழ். மாவட்டச் செயலராக அ.சிவபாலசுந்தரனை நியமிப்பதற்கு அமைச்சரவை



தீர்மானித்தது. அதற்கு அமைவாக அவருக்கு நியமனக் கடிதம் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது. இந்த நிலையில் அவர் யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

'அரச உத்தியோகத்தர்கள் தங்கள் திறமைகளை முழுமையாகப் பயன்படுத்திப் பொதுமக்களுக்கான அர்ப்பணிப்பான சேவைகளைச் சரியான முறையில் வழங்குவதுடன் மாவட்டத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும், ஒருங்கிணைந்தும் செயற்படவேண்டும். யாழ். மாவட்டத்தின் கீர்த்திக்கு வழிகாட்டியாக இருந்த முன்னாள் யாழ். மாவட்டச் செயலர்களுக்கு நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்' - என்றார்.

நேற்றைய நிகழ்வில் வடக்கு மாகாணப் பிரதம செயலர் சமன் பந்துலசேன, யாழ். மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன், மேலதிக மாவட்டச் செயலர் சு.முரளிதரன், பிரதேச செயலர்கள், யாழ். மாவட்டச் செயலக அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(அ-ஒ-66)

## இ.போ.ச...

கவனிக்கும் வகையில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அந்த நியமனத்தை தாம் ஏற்கவில்லையென்றும் இ.போ.ச.வின் சில தொழிற்சங்கப் பிரிவுகள் தெரிவித்துள்ளன.

வடபிராந்திய முகாமையாளர் பதவி வெற்றிடமாக உள்ளதாகவும், அதற்கு தகுதியானவர்கள் வடக்கில் இருக்கும் போதே, அதனை நிரப்பாமல், நிர்வாகத்தைக் கவனிப்பதற்கென பெரும்பான்மையினத்தவரை நியமிப்பது உள்நோக்கமுடையது என தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

புதிதாக நியமிக்கப்பட்டவர் இன்று தனது கடமைகளைப் பொறுப்பேற்பார் என்றும், இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தொழிற்சங்க நடவடிக்கைகளில் இந்தச் சங்கங்கள் குதிக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ஒ-26)

## ரணிலுக்கு...

'சட்டவிரோதமாகக் கூட்டம் நடத்தியமை, ஜனாதிபதிக்கு எதிராகக் கறுப்புக் கொடி காட்டியமை, பொலிஸார் பேரணியைத் தடுத்தபோது அவர்களுக்கு இடையூறு விளைவித்தமை, பொலிஸாருக்கு காயம் விளைவித்தமை' போன்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு நேற்று மாலை கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீன முதல்வரும், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளருமான தவத்திரு வேலன் சுவாமிகள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று இரவு முற்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய பொங்கல் விழாவில் ஜனாதிபதி கலந்து கொண்டபோது யாழ். பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற எதிர்ப்புப் போராட்டத்தின்போது, பொலிஸார் தடுப்புக்களை ஏற்படுத்தி இருந்தனர். அதன்போது, பொலிஸாரின் தடுப்புக்களைத் தாண்டிச் செல்ல போராட்டக்காரர்கள் முற்பட்டனர். அதன்போது, பொலிஸார் அவர்கள் மீது நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டனர். இதன்போது பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையில் தள்ளுமுள்ளு ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில் கொழும்பிலிருந்து கிடைக்கப்பெற்ற அறிவுறுத்தல்களுக்கு அமைவாக நேற்று மதியம் வேலன் சுவாமியின் வீட்டுக்குச் சென்ற பொலிஸார் அவரை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைக்கு அழைத்தனர். விசாரணைகளின் பின்னர் அவரைக் கைது செய்தனர். உடனடியாகவே அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

இதன்போது அவர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், வி.மணிவண்ணன், க.சுகாஸ், சி.சிவசிறி ஆகியோர் முன்னிலையாகினர்.

மன்றில் இடம்பெற்ற விசாரணைகளின் அடிப்படையில் வேலன் சுவாமிகளுக்கு பிணை வழங்கப்பட்டது.

வழக்கு முடிவில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன்,

எதிர்ப்புப் பேரணியில் வேலன் சுவாமி பங்குபற்றியிருந்தார். அதன் காரணமாக அவரைக் கைது செய்துள்ளார்கள். சட்டவிரோதக் கூட்டமொன்றை நடத்தியதாகவும், ஜனாதிபதிக்கு எதிராகக் கறுப்பு கொடி காட்டியதாகவும், பொலிஸார் ஊர்வலத்தை தடுத்தபொழுது பொலிஸாருக்கு இடையூறு விளைவித்ததாகவும் காயம் விளைவித்ததாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

அமைதியான முறையில் நடத்தப்பட்ட ஒரு பேரணி, இலங்கை அரசமைப்பிலே 14 ஆவது உறுப்புரையிலே இப்படியான எதிர்ப்புப்பேரணிகள் நடத்துவதற்கு முழு உரித்தும் இருக்கிறது என்பதை மன்றிலே சுட்டிக்காட்டி இருக்கிறோம். இதனை ஒரு சட்டவிரோதக் கூட்டம் என்று பொலிஸார் அழைப்பதற்கு எந்தவிதச் சட்ட அடிப்படையும் கிடையாது என்பதை தெளிவாக நீதிமன்றத்துக்கு சொல்லி இருக்கிறோம். அது மட்டுமல்ல அமைதியான முறையில் நடத்தப்பட்டு ஜனாதிபதி அவர்களுக்கு இங்கே இருக்கக் கூடிய மக்களுடைய எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்குரிய உரிமை இருக்கிறது என்றும், மக்கள் சார்பாக இதனைத் தெளிவுபடுத்தவேண்டும் என்றும் வேலன் சுவாமி மிகவும் அமைதியாக பொலிஸாரிடத்திலே பல தடவைகள் கேட்டிருந்தார். ஆனால் அவர்கள் மறுத்த காரணத்தாலும் அதற்குப் பதில் சொல்லாமல் இருந்த காரணத்தாலும் பின்னர் ஜனாதிபதி போய்விட்டார் என்று பொய் சொன்ன காரணத்தாலும் கோபமடைந்த கூட்டத்தில் இருந்தவர்கள் அந்தத் தடுப்பு வேலியை அகற்றி முன்னேறினர். அப்போது பொலிஸார் நீர்த்தாரை அடித்து குழப்பினர். வேலன்சுவாமி எந்த விதமான வன்முறையிலும் ஈடுபடவில்லை. இது சம்பந்தமாக பொலிஸாருடைய குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்பதையும் நீதிமன்றத்துக்கு எடுத்துச்சொல்லி இருக்கிறோம். பொலிஸாருடைய முறைப்பாட்டையும் நாங்கள் செய்த சமர்ப்பணங்களையும் செவிமடுத்த நீதிமன்று, வேலன் சுவாமியை ஆள் பிணையில் செல்வதற்கு அனுமதித்திருக்கின்றது. ஜனவரி 31ஆம் திகதி இந்த வழக்கு மீண்டும் நீதிமன்றத்தில் எடுக்கப்படும்.

இதற்கு மேலதிகமாக, பொலிஸார் சில தடைகளை உபயோகித்து மக்களைத் திசைதிருப்பிய வேளையிலே தனக்கு காயம் விளைவித்ததாகவும் தன்னைத் தாக்கியதாகவும் வேலன் சுவாமி கொடுத்த வாக்குமூலத்திலே குறிப்பிட்டுள்ளார். அதனை நீதிமன்றத்தில் தெரியப்படுத்தியிருந்த நிலையில் காயங்களை ஆராய்ந்து நீதிமன்றத்தில் அறிக்கை சமர்பிக்குமாறும் உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது - என்றார்.

இதேவேளை -

தென்னிலங்கையில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்திய அரகலய போராட்டக்காரர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகக் கொடூரமான முறையில் தான் ஆட்சிக்கு வந்ததும் ஒடுக்கியிருந்தார். போராட்டக்காரக்களை கைது செய்துமிருந்தார். அதேபாணியில் ஜனாதிபதிக்கு எதிர்ப்புத் தெரிவித்தோரைக் கைது செய்யும் படலத்தை யாழ்ப்பாணப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

வேலன் சுவாமி நேற்றுக் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், அன்றைய தினம் போராட்டத்தில் மேலும் சிலரும் கைதாகலாம் எனத் தெரியவருகின்றது.

மேலும், எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி அம்பாறையில் ஆரம்பித்து பெப்ரவரி 4 ஆம் திகதி சிறிலங்காவின் சுதந்திர நாளில் யாழ்ப்பாணத்தில் மிகப் பெரிய போராட்டம் ஒன்றை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. இதில் சிவில் சமூகத்தினர் கலந்துகொள்வதைத் தடுப்பதற்காகவே இந்தக் கைது இடம்பெற்றிருக்கலாம் என்றும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

(அ-ஒ-5-26-27-125)

## விடுதி...

குறித்த ஹோட்டலில் கடந்த திங்கட்கிழமை இரவு தென்பகுதியைச் சேர்ந்த இளைஞனும், வவுனியாவைச் சேர்ந்த இளம் பெண்ணும் அறை எடுத்து தங்கியுள்ளனர். அன்றைய தினம் இரவு 12 மணிக்கு அண்மித்ததாக, வளிச்சீராக்கி (ஏ.சி.) அருகில் சிறிய துவாரம் ஊடாக 'கமெரா' ஒன்று இருப்பதையும் அதன் ஊடாக ஒளிப்பதிவு செய்யப்படுவதையும் அறையிலிருந்தவர்கள் அவதானித்துள்ளனர்.

உடனடியாக வெளியில் சென்றுபார்த்த போது அதே தளத்திலுள்ள இன்னொரு அறையின் கதவு சடுதியாக மூடப்பட்டதை அவதானித்துள்ளனர். இது தொடர்பில் ஹோட்டலின் ஊழியர்களுக்குத் தெரியப்படுத்தியபோதும் அவர்கள் அதனைக் கண்டுகொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. அறையிலிருந்தவர்கள் தர்க்கப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி அறையின் கதவை ஊழியர்கள் திறந்தபோது, அங்கும் ஹோட்டலில் பணிபுரியும் ஊழியர் ஒருவரே தங்கியிருந்துள்ளார். அவரது கைத்தொலைபேசியை வாங்கிச் சோதனையிட்டபோது, காணொலி இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து அறையில் வாடகைக்கு தங்கியிருந்த இருவரும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். அதற்கு அமைவாக, அவர்களை இரகசியமாக காணொலிப் பதிவு செய்த ஹோட்டல் ஊழியர் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, ஹோட்டலின் அறையினுள் கண்ணாடி வைக்கப்பட்டு அது திரைச்சீலையால் மறைக்கப்பட்ட நிலையில் காணப்படுவதாகவும் அதன் ஊடாகவும் ஒளிப்பதிவு செய்யக்கூடிய நிலைமை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. பொலிஸார் அதனைச் சோதனையிட்டபோது கண்ணாடியை மறைக்கும் வகையில் வர்ணப் பூச்சு பூசப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

மேற்படி ஹோட்டலில் தம்பதியர்களாகச் செல்பவர்களுக்கு ஒரு சில அறைகளை மாத்திரமே தெரிந்தெடுத்து வாடகைக்கு வழங்குவதாகவும், நீண்ட நாள்களாக இவ்வாறு இரகசியமாக ஒளிப்பதிவு இடம்பெற்றிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலும் பொலிஸ் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

(அ-ஒ-5)

## வடக்கில்...

நேற்றைய தினம் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வேட்புமனுத் தாக்கல் செய்தது. மன்னார் மாவட்டத்தில் முசலி பிரதேச சபைக்கு மாத்திரம் ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளது.

ஏனைய மாவட்டங்களில் எந்தவொரு வேட்புமனுவும் நேற்றுத் தாக்கல் செய்யப்படவில்லை. (அ-ஒ-5)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **கோயிலாக்கண்டி பகுதியில்**
**24 பரப்புக்** காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- A32 பிரதான வீதியில் இருந்து 600M தூரம்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இருவழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும், சாவகச்சேரி நகரத்திற்கும் அரச, தனியார் பஸ் போக்குவரத்து சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்)
  நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)
  ஒரு பரப்பின் விலை 675000 ரூபாய் மட்டுமே.
- **பார்வையிடும் நேரம்:-** காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

தொடர்பு:- **ஜெயம் 077 8147 389**
**077 9865 457**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொங்கல் விழாவும் உழவர் கௌரவிப்பும்

மன்னார் மாவட்டச் செயலக நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் 2023ஆம் ஆண்டுக்கான பொங்கல் விழாவும் உழவர் கௌரவிப்பும் மாவட்டச் செயலகத்தின் விழா மண்டபத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்டச் செயலர் திருமதி அ. ஸ்ரான்லி டிமெல் கலந்து கொண்டு விவசாயிகளைக் கௌரவித்தார்.

நிகழ்வில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் மேலதிக மாவட்டச் செயலர்கள், திணைக்களத் தலைவர்கள், பதவி நிலை உத்தியோகத்தர்கள், உதவிப் பிரதேச செயலர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

(ம-14,213)


## காணி விற்பனைக்கு

யாழ். தெல்லிப்பளை பிரதான வைத்தியசாலை வீதியிலிருந்து **500 M** தூரத்திலிருந்து 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. மல்லாகம் முனியப்பர் கோயில் வீதியிலிருந்து **400 M** தூரத்தில் விமான நிலைய வீதி, மல்லாகம்.

**பார்வை நேரம் : 8.00 AM - 6.00 PM**

தொடர்பு:- **077 638 5683, 076 755 8606.**

## மணப்பெண் தேவை

1. கொடிகாமம் - Jaffna Town, இந்து கௌரவ குலம் (V). ஆயிலியம். 1980. Lawyer, Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 32385
2. யாழ்ப்பாணம். இந்து. கௌரவகுலம் (V). ரோகிணி. 1988. Senior Management Accountant Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 31457
3. மாவிட்டபுரம். இந்து. கௌரவகுலம் (V). கார்த்திகை. 1986. Electronic Eng, MBA, Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 29544
4. Jaffna Town , இந்து. கௌரவகுலம் (V). சித்திரை. 1961. A/L , Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண்தேவை. பதிவெண் - 28202
5. வடமராட்சி. இந்து. கௌவரகுலம் (V). சித்திரை. 1974. A/L, Machine Maintenance, Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண்தேவை. பதிவெண் - 25446
6. சாவகச்சேரி. இந்து. கௌரவகுலம் (V). 1979. ரேவதி. Business, Germany citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 31825
7. யாழ்ப்பாணம். இந்து. கௌரவகுலம் (V). 1985. ரேவதி. Divorce (Nullified), Computer Engineering, Germany Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 31625
8. வட்டுக்கோட்டை - மூளாய். இந்து. கௌரவகுலம் (V). கேட்டை. 1983. Charted Accountant, Australia citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 24770
9. கோப்பாய். இந்து. கௌரவகுலம் (V). 1984. சதயம். MBBS Doctor, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 32160
10. திருநெல்வேலி. இந்து. கௌரவகுலம் (V). 1990. விசாகம். MBBS Doctor, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 32016
11. யாழ்ப்பாணம். இந்து. கௌரவகுலம் (V), 1984, சுவாதி. BSc, Business Management, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 31799
12. திருநெல்வேலி. இந்து. கௌரவகுலம் (V), 1983. ரோகினி. BSc (Hons) Computer Science, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 31305
13. கரவெட்டி. இந்து. கௌரவகுலம் (V). 1986. அத்தம். BSc (Hons) in quantity surveying, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 29720
14. மீசாலை. இந்து. கௌரவகுலம் (V), 1988. சதயம். MSc Engineer, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 29216

S.Sharma J.P, Astrologer, Whats app - 077 803 8193


## மரண அறிவித்தல்

மலர்வு 25 . 12 . 1944

உதிர்வு 15 . 01 . 2023



### திருமதி நிர்மலா குணநாதன் (நிம்மா)

ஓய்வுபெற்ற ஆசிரியை - முன்னாள் சைக்கிள் ஓட்ட வீராங்கனை (யாழ் / திருமலை / மட்டக்களப்பு) - வயது 78

யாழ். மானிப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், கனடா Totonto மற்றும் Ottawa ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நிர்மலா குணநாதன் கடந்த (15-01-2023) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் தளையசிங்கம் (ஓய்வுபெற்ற கப்டன்) விஜய லட்சுமி (விஜயா) தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் ஏகாம்பரம் பூரணம் தம்பதிகளின் மருமகளும்.காலம்சென்ற Dr. ஏகாம்பரம் குணநாதன் அவர்களின் அன்பு மனைவியும், நிராஜ் (கனடா), ஹேமதயானி (கனடா), அமுதினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரிஷா, ரோஜர், ஜோனத்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும், வனிடா, ஹரிஸ், எமிலி, கிரேஸ் ஆகியோரின் பேத்தியும், பிறேமிலா (கனடா), ராஜ்குமார் (கனடா), ரஞ்சித்குமார் (கனடா), காலஞ்சென்றவர்களான ஜெகத்குமார், சியாமளா, நந்தகுமார் மற்றும் மஞ்சுளா (மஞ்சு - பிரித்தானியா), வக்சலா (வக்ஷி - கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்ற செல்வநாயகம், பாக்கியலட்சுமி, சந்திரிக்கா, ராதா, நாகேந்திரன், சந்திரகுமார், காலஞ் சென்ற சுப்ரமணியம்(சுப்ரா), பத்மநாதன்- கமலாதேவி, சண்முகநாதன்- நகுலேஸரி, யோகநாதன்- பவளராணி, டில்லிராணி- பத்பநாதன் ஆகியோரின் மைத்துனியும்.கிரிஷாந்தி, ரூபன், சிந்துஜா, சிவராம், சிவாஜினி ஆகியோரின் பெரியம்மாவும், அருள்ராஜ், ராம்ராஜ், ராதா, ரமா, ரஷ்மி, ரிஷா, ஜெஸ்மீன், சதீஸ் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

Note :- கிரியை நிகழ்வுகளை இலங்கை நேரப்படி (8.30pm - 10.00 pm) லங்காசிறியில் நேரலையில் காணமுடியும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு**

தயானி - மகள் Mobile : +19054094407, அமுதினி - மகள் Mobile : +19059032121, நிராஜ் - மகன் Mobile : +16138512029, வக்சலா - சகோதரி Mobile : +16479293089, ராஜ்குமார் - சகோதரன் Mobile : +16479887519, ரஞ்சித்குமார் - சகோதரன் Mobile : +16479881949, மஞ்சுளா - சகோதரி Mobile : +447958365354

(CS 23009)4/6)

## மரண அறிவித்தல்

பிறப்பு 07 . 07 . 1942

இறப்பு 18 . 01 . 2023



### திருமதி செல்வராஜேஸ்வரி பொன்னுசாமி

(யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி - முன்னாள் உப அதிபர் B.A.Dip.in Edu.)

யாழ்ப்பாணம் 171 /B, மானிப்பாய் வீதி, ஓட்டுமடத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்வராஜேஸ்வரி பொன்னுசாமி நேற்று (18.01.2023) புதன் கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுசாமி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற பொன்னுச்சாமி சிவக்கொழுந்தம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ் சென்ற ஆறுமுகம் நாகமுத்து தம்பதியரின் மருமகளும், அமலன் (Nestle Lanka), அகிலன் (யாழ். மாநகர சபை) ஆகியோரின் அன்புத் தாயும், கல்யாணி (ஆசிரியர் - யா/புனித றோக்ஸ் றோ.க. வித்தி), நீரஜா ஆகியோரின் மாமியும், காலஞ்சென்ற தயானந்தராசா, Dr.மாணிக்கராஜா (London), கலாவதி (London) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தேவி, பரமேஸ்வரி, தம்பையா ஆகியோரின் மைத்துனியும், கார்த்திகா, துளசிகா, துஷாரிகா, சிவகஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2023) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: **077 237 5098** (cs 23011) (2.6) **தகவல்: குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 07 . 1949

மறைவு 16 . 01 . 2023



### திருமதி கமலாம்பிகை அழகேஸ்வரன்

நுணாவில் மேற்கு, மடத்தடி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், தம்பளாவத்தை, அளவெட்டி மேற்கு, அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை அழகேஸ்வரன் கடந்த (16.01.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராமலிங்கம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அழகேஸ்வரனின் அன்புத் துணைவியாரும், வாசுகி (லண்டன்), ரகு (கனடா), வாசினி, கோபி (லண்டன்), வாகினி (லண்டன்) ஆகியோ ரின் பாசமிகு தாயாரும், சிறிகரன் (லண்டன்), சியாமளா, சுகன்யா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அஜித் (லண்டன்), அலெக்சன் (லண்டன்), சஞ்சனா (லண்டன்), துர்க்கா, அபிசரன், அபர்ணா, ரவிப்பிரகாஷ், ரஜித், வாமினா, டியா (லண்டன்), ரியா (லண்டன்), சரன் (லண்டன்), கீர்த்தனா (லண்டன்), நந்தினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், லைலா (லண்டன்), தஷா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பூட்டியும், சிவயோகம் (கனடா), அம்பிகாவதி (இ.போ.கழகம்), மகேந்திரன், புளேந்திரன், குணமணி (இந்தியா), இராசேந்திரம் (இ.மி. சபை), காலஞ்சென்ற சசிகலா மற்றும் புகளேந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.01.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அளவெட்டி மேற்கு, அளவெட்டி.** (CS/48676)4/6) **தகவல்: குடும்பத்தினர்.**

**077 360 9989**

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org